Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 59 of 2022**

Deposition of ....... witness for ................. Prosecution........**P.W.8**

Defence

Court

| | |
|---|---|
| Name | **லதா** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 25th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 25th day of November 2025.**

**1, 3, 4,5, 6 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்று போய்விட்டது.**

**முதல்விசாரணை**:

நான் தற்சமயம் பண்ருட்டி, வல்லம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2020 ஆம் திருவதிகை கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது 06.09.2020 அன்று மதியம் 1.00 மணியளவில் எங்கள் அலுவலகத்தில் இருந்த போது பண்ருட்டி காவல் நிலைய பயிற்சி துணைகண்காணிப்பாளர் அவர்கள் தொலைபேசியில் அழைத்து கொலை வழக்கு சமந்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டப்பவரை விசாரணை செய்யும் போது சாட்சியாக இருக்க கோரி அழைத்தார். நானும் எனது கிராம உதவியாளரும் போலிசார் சொன்ன திருவதிகை மண்டபம் பேருந்து நிறுத்தம் அருகே சென்றோம். அங்கு 1வது எதிரி ஞானவேல் மற்றும் போலிசார் மற்றும் சில நபர்கள் இருந்தார்கள். 1வது எதிரி ஞானவேல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதை போலிசார் கையில் எழுதி பதிவு செய்துக்கொண்டார்கள். கார்பன் பேப்பர் வைத்து எழுதினார்கள். கொலைக்கு பயன்படுத்திய ஆயுதத்தை கெடிலம் நதிக்கரையில் முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாக 1வது எதிரி ஞானவேல் சொன்னதன் பேரில் நான், எனது கிராம உதவியாளர், போலிசார் மற்றும் 1வது எதிரி ஞானவேல் கெடிலம் நதிக்கரைக்கு சென்றோம். அங்கே 1வது எதிரி ஞானவேல் மறைத்து வைத்திருந்த நீளமான பைப்( ஏற்கனவே சான்று பொருள் 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது), மூன்று கத்திகள்(எற்கனவே சான்று பொருள் 2 மற்றும் 3 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது) ஒரு பேண்ட் மற்றும் ஒரு நீல கலர் கட்டம் போட்ட சட்டை

மற்றும் ஒரு டிசர்ட் எதிரிகள் பயன்படுத்தியது ஆகியவற்றை கைப்பற்றினார்கள். குறிப்பிட்டு எத்தனை பேண்ட்கள் எத்தனை சட்டைகள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. **காண்பிக்கப்பட்ட 1வது எதிரி அளித்த ஒப்புதல்வாக்குமூலத்தில் சாட்சியாக நான் செய்த கையொப்பம் அதசாஆ 3 ஆகும். 1வது எதிரி அளித்த ஒப்பதல்வாக்குமூலத்தில் கத்திகள் மற்றும் இரும்பு பைப் மற்றும் இரத்தக்கரைப்படிந்த தங்களது ஆடைகளை மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காட்டி ஆஜர் செய்வதாக அளித்த வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட ஒரு பகுதி அதசாஆ 4 ஆகும். கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ 5 ஆகும்.** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

கிராம நிர்வாக அதிகாரிக்கு பணி நேரம் என குறிப்பிட்டு கிடையாது. 24 மணி நேரமும் பணி செய்ய வேண்டும். கிராம நிர்வாக அதிகாரி வட்டாட்சியரிடம் தகவல் சொல்லி விட்டு வெளி வேலைக்கு செல்லுவோம். அலுவலகத்தில் நான் இல்லாத நேரத்தில் உதவியாளர் இருப்பார். வெளி பணிக்கு செல்லுவது என்றால் பதிவேட்டில் ( Movement Register) எழுதி விட்டு தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான் அது நடைமுறையில் இல்லை. அன்று சுமார் 12 நபர்கள் எங்களது அலுவலகத்திற்கு வேலையாக வந்தார்கள். போலிசார் போன் செய்த சமயம் மதியம் 1.00 மணி இருக்கும். எனது அலுவலகத்தில் இருந்து மண்டபம் பேருந்து நிலையம் 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். மதியம் 1.30 மணிக்கு மண்டபம் பேருந்து நிறுத்தம் சென்றேன். காலையிலேயே எனது அலுவலகம் வந்த 12 நபர்களின் வேலையை முடித்து விட்டு

தான் சென்றேன். வெளி வேலைக்கு செல்லுவதாக அன்று அறிவிப்பு எதுவும் எங்கள் அலுவலகத்தில் ஒட்டவில்லை. நான் மண்டபம் பேருந்து நிறுத்தம் சென்ற போது 1வது எதிரி ஞானவேலை கைது செய்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி ஞானவேலை தவிர போலிசாரும் சில குற்றவாளிகளும் இருந்தார்கள். 1வது எதிரி ஞானவேலை விசாரிக்க விசாரிக்க வாக்குமூலம் எழுதினார்கள். போலிசார் தான் அவரை விசாரித்தார்கள். நான் இருசக்கரவாகனத்தில் பேருந்து நிறுத்தம் சென்றேன். போலிசார் ஜீப்பில் வந்தார்கள். கெடிலம் நதிக்கரையில் இருந்து பேருந்து நிறுத்தம் 2-3 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். அப்போது நேரம் மாலை 3.00 மணி இருக்கும். ஒப்புதல்வாக்குமூலம் மண்டபம் பேருந்து நிறுத்தத்தில் கையொப்பம் செய்தேன். ஒப்புதல்வாக்குமூலம் எழுதப்பட்ட சமயத்தில் நான் பக்கத்தில் தான் இருந்தேன். ஒப்புதல்வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். ஒப்புதல்வாக்குமூலத்தில் மண்டபம் பேருந்து நிறுத்தம் அருகே கைது செய்து வைத்திருந்ததாக உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகஜர் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் விசாரணையில் நான் சொன்ன சான்று பொருட்களை தான் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். அன்றே என்னை போலிசார் விசாரித்து விட்டார்கள் எத்தனை மணி என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணையில் மண்டபம் பேருந்து நிறுத்தம் அருகே எதிரியை கைது செய்து வைத்திருப்பதாகவும் நான் மண்டபம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய கிராம நிர்வாக அலுவலகத்திற்கு பண்ருட்டி காவல் நிலையத்திற்கும் இடையே 1 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும்.

ஒப்புதல்வாக்குமூலத்தை மதியம் 1.30 மணிக்கு மேல் தான் எழுதினார்கள் என்றால் சரிதான். நான் மண்டபம் பேருந்து நிறுத்தத்திற்கு செல்லும் போதே மதியம் 1.30 மணி ஆகிவிட்டது என்றால் சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. அடையாளம் தெரியாத பிரேதம் இருந்தால் நான் போலிசாருக்கு தெரியப்படுத்துவேன் என்று சொன்னால் சரிதான். நான் கையொப்பங்களை பண்ருட்டி காவல் நிலையத்தில் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 1வது எதிரி ஞானவேலை போலிசார் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி ஞானவேல் எந்தவித ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் போலிசார் கெடிலம் நதிக்கரையில் எந்த பொருட்களையும் கைப்பற்ற வில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது உதவியாளரும் பயிற்சி துணைகண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டதால் பண்ருட்டி காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

எனது அலுவலகத்திற்கும் தட்டாஞ்சாவடி பேருந்து நிறுத்திதிற்கும் இடையே 6 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். இருசக்கரவாகனத்தில் 10 நிமிடத்தில் சென்று விடலாம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பயிற்சி துணைகண்காணிப்பாளர் என்னை திருவதிகை மண்டபம் பேருந்து நிறுத்திற்கு தான் வர சொன்னார்கள் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

தட்டாஞ்சாவடி பேருந்து நிறுத்தம் என்பதும் திருவதிகை மண்டபம் பேருந்து நிறுத்தம் என்பதும் எங்கே உள்ளது ?

**பதில்** :-

இரண்டும் வெவ்வேறு இடத்தில் உள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*